

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம்விளக்கு கிழக்கு பகுதி, 118 வது வட்ட தி.மு.க. வை சார்ந்த ஆயிரம்விளக்கு பகுதி முன்னாள் இளைஞர் அணி அமைப்பாளரும், முன்னாள் மாமன்ற உறுப்பினருமான, திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னோடி பி.சிவா (எ) சிவகுமார் அவர்களின் படத்திறப்பு நிகழ்ச்சியில் மு.க.தமிழரசு, வழக்கறிஞர் ச.ரத்னாகரன், வட்டக் கழகச் செயலாளர் கோ.யுவராஜ், ஜெ.நற்குணநாதன், ப.உதயகுமார், ப.கோடீஸ்வரன், டி.பிரபா, கோதா மற்றும் மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக இந்நாள் முன்னாள் நிர்வாகிகள், கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

## கர்நாடகா

## காவிரியிலிருந்து 6972 கன அடி நீர் திறப்பு!

பெங்களூரு, ஜூலை 12-

கர்நாடக மாநிலத்தில் உள்ள காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளதால் அங்குள்ள கிருஷ்ண ராஜசாகர், கபினி, ஹாரங்கி, ஹேமாவதி ஆகிய அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. குறிப்பாக கபினி மற்றும் கிருஷ்ண ராஜசாகர் அணைகளின் நீர்மட்டம் வேகமாக நிரம்பி வருகிறது.

கபினி அணையின் மொத்த நீர்மட்ட உயரம் 84 அடியாகும். நேற்று காலை அணையின் நீர் மட்டம் 82.68 அடியாக நீடிக்கிறது. அணைக்கு வினாடிக்கு 5,118 கன அடி தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது.

இந்த 2 அணையில் இருந்தும் மொத்தம் விநாடிக்கு 6,972 கன அடி வீதம் நீர் காவிரி ஆற்றில் தமிழகத்துக்கு திறந்து விடப்பட்டுள்ளது.

## மகளிர் உரிமைத் தொகை!

# ரூ.1000 மேலும் 1.48 லட்சம் பேருக்கு வழங்கப்படும்!

## அமைச்சர் தங்கம் தென்னரசு தகவல்!

விருதுநகர், ஜூலை 12-

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்திற்காக மேல்முறையீடு செய்தவர்களில் தகுதியானவர்களுக்கு எப்போது தொகை வழங்கப்படும் என்பது குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

பெண்கள் என்றால் இரண்டாம் தர குடிமக்களாகவே இன்றும் இந்த சமூகம் கருதுகிறது. ஒவ்வொரு பெண்ணும் தன்னை இச்சமூகத்தில் நிலை நிறுத்திக்கொள்ள ஏராளமான போராட்டங்களை எதிர்கொள்கிறார்கள். ஆண்களுக்கு கிடைக்கும் வாய்ப்புகள் பெண்களுக்கு இயல்பாக கிடைப்பதில்லை. வீட்டிலும் வேலை செய்துவிட்டு வெளியிலும் சென்று தன்னை நிரூபிக்க அவர்கள் இரண்டு மடங்கு உழைப்பை செலுத்த வேண்டியுள்ளது. ஆனால் அவர்கள் நடத்திய தொடர் போராட்டங்களும், கருத்தியல் போர்களும் தற்போது அவர்களின் நிலையை மாற்ற தொடங்கியுள்ளது.



குறிப்பாக வீட்டில் குடும்பத்திற்காக தனது முழு வாழ்க்கையையும் அர்ப்பணிக்கும் பெண்களை பற்றி இந்த சமூகம் விரிவாக பேச தொடங்கியிருக்கிறது. அதன் விளைவுதான் குடும்ப பெண்களுக்கான ஊதியம். நாங்களும் வேலைதான் செய்கிறோம். ஆனால் அது மட்டும் கணக்கில் கொள்ளப்படுவதே கிடையாது என்று கூறிய அவர்கள், தங்களுக்கான ஊதியத்தை கேட்க தொடங்கியுள்ளனர். இதை முற்போக்கு இயக்கங்கள்/கட்சிகள் வரவேற்று ஆதரவாக குரல் கொடுத்து வருகின்றன.

அந்த வகையில் குடும்ப பெண்களுக்கு உரிமைத் தொகை வழங்கப்படும் என்று திமுக கடந்த சட்டமன்ற தேர்தலின்போது வாக்குறுதி அளித்திருந்தது. இதனையடுத்து திமுக வெற்றி பெற்று முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் அவர்கள் பதவியேற்ற நிலையில், கடந்த ஆண்டு அண்ணா பிறந்தநாளான செப்டம்பர் 15ம் தேதி முதல் இந்த உரிமைத் தொகை குடும்ப தலைவிகளின் வங்கிக்கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டது.

இந்த உரிமை தொகைக்காக மொத்தம் 1.63 கோடி பேர் விண்ணப்பித்திருந்தனர். இதில், 1 கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் குடும்ப தலைவிகளின் வங்கி கணக்கில் மட்டுமே உரிமை தொகை செலுத்தப்பட்டது.

மற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. உரிமை தொகை பெற தகுதி இருந்தும் தங்களது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதாக பலரும் விமர்சனங்களை எழுப்பினர். இதனையடுத்து, இரண்டாம் கட்டமாக 2023 நவம்பர் மாதம் 7.35 லட்சம் மகளிருக்கு உரிமைத்தொகை வழங்கப்பட்டது. தற்போது 1 கோடியே 13 லட்சத்து 84 ஆயிரத்து 300 மகளிருக்கு உரிமைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இது தவிர மேலும் 11.85 லட்சம் மகளிர் உரிமைத் தொகைக்காக மேல்முறையீடு செய்திருந்துள்ளனர். இவர்களுக்கு உரிமைத் தொகை எப்போது வழங்கப்படும் என்று கேள்வி எழுந்தன. இதனையடுத்து, இது தொடர்பான முக்கிய அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதாவது, மேல்முறையீடு செய்தவர்களில் தகுதியானவர்களாக 1.48 லட்சம் பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாகவும், இவர்களின் வங்கி கணக்கில் ஜூலை 15ம் தேதி முதல் ரூ.1000 உரிமைத் தொகை செலுத்தப்படும் என அமைச்சர் தங்கம் தென்னரசு கூறியுள்ளார்.

விருதுநகர் மாவட்டம் காரியப்பட்டியில் நடந்த மக்களுடன் முதல்வர் திட்டத்தின் 2வது கட்ட தொடக்க விழாவில் பேசிய அவர், "மகளிர் உரிமைத் தொகை கேட்டு மேல்முறையீடு செய்தவர்களில் 1.48 லட்சம் பேர் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்கு உரிமைத் தொகை ஜூலை 15 முதல் விடுவிக்கப்படும்" என தெரிவித்திருக்கிறார்.

## இன்று முதல் 20 நாட்களுக்கு

# தமிழ்நாட்டிற்கு கர்நாடகா தண்ணீர் கொடுக்க வேண்டும்!

## காவிரி ஒழுங்காற்று குழு உத்தரவு!

சென்னை, ஜூலை 12-

தமிழகத்திற்கு இன்று முதல் வரும் 31 ஆம் தேதி வரை தினமும் 1 டிஎம்சி தண்ணீர் திறந்து விட கர்நாடகாவுக்கு காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழு உத்தரவிட்டுள்ளது.

காவிரி நீரை பெறுவதற்கு தமிழ்நாடு தொடர்ந்து கர்நாடக மாநிலத்திடம் போராடி வருகிறது. கடந்த ஆகஸ்ட் மாதம் விநாடிக்கு 25,000 கன அடி நீர் திறந்து விட வேண்டும் என்று தமிழ்நாடு வலியுறுத்தியிருந்தது. இதனை கர்நாடகா ஏற்கவில்லை. எனவே உச்சநீதிமன்றத்தை தமிழக அரசு நாடியது. அதேபோல கர்நாடக அரசும் நீதிமன்றத்தை நாட காவிரி மேலாண்மை ஆணையம் இந்த விவகாரம் குறித்து முடிவெடுக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

உச்சநீதிமன்ற இறுதி தீர்ப்பின்படி, தமிழகத்துக்கு 2023 ஜூன் மாதத்தில் இருந்து 2024 ஏப்ரல் 28ம் தேதி வரை கர்நாடக அரசு 174.497 டிஎம்சி நீர் திறந்துவிட்டிருக்க வேண்டும். ஆனால்,78.728 டிஎம்சி மட்டுமே திறக்கப்பட்டுள்ளது. இன்னும் 95.770 டிஎம்சி நீர் நிலுவையில் உள்ளது. இதுதவிர, பிப்ரவரி முதல் ஏப்ரல் 28 வரை பிலிகுண்டுலுவில் 7.333 டிஎம்சி நீரை சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காக கர்நாடகா திறந்துவிட்டிருக்க வேண்டும். ஆனால், இதுவரை 2.016 டிஎம்சி மட்டுமே திறக்கப்பட்டுள்ளது. இதில், 5.317 டிஎம்சி நீர் நிலுவையில் உள்ளது.

தற்போது மேட்டூர் அணையில் 12.95 டிஎம்சி நீர் இருப்பில் உள்ளது. குடிநீர் தேவை, சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காக தினமும் 1,200 கன அடி நீர்திறக்கப்பட்டு வந்த நிலையில், இது 1000 கன அடியாக குறைக்கப்பட்டிருக்கிறது. கர்நாடகாவில் உள்ள 4 அணைகளின் நீர் இருப்பை கணக்கிட்டு, தமிழகத்துக்கு மே மாதத்தில் வழங்க வேண்டிய 2.5 டிஎம்சி நீரை திறக்க உத்தரவிட வேண்டும். சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான 2.5 டிஎம்சி நீரையும் கர்நாடகா திறந்துவிட வேண்டும் என தமிழ்நாடு அரசு தொடர்ந்து கோரி வருகிறது.

இதற்கு கர்நாடக அரசின் தரப்பில் கூறியதாவது: கர்நாடகாவில் கடும் வறட்சி நிலவுகிறது. பிப்ரவரி முதல் ஏப்ரல் வரை மழை இல்லை. தற்போது கிருஷ்ணராஜசாகர், கபினி, ஹாரங்கி, ஹேமாவதி ஆகிய 4 அணைகளிலும் மிக குறைந்த அளவிலேயே நீர் உள்ளது என்றும் இதை கொண்டே பெங்களூரு, மைசூருவின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. இப்படி இருக்கையில் தமிழகத்துக்கு நீரை திறந்துவிட்டால் கர்நாடகாவில் குடிநீர் பஞ்சம் ஏற்படும். தற்போதைய சூழலில் தமிழகத்துக்கு நீர் திறக்க இயலாது என கர்நாடகா போதுமான நீரை திறக்க மறுத்து வருகிறது.

இந்நிலையில் நேற்று காவிரி நீர் ஒழுங்காற்றுக்குழுவின் 99வது கூட்டம் நேற்று காணொலி வாயிலாக நடைபெற்றது. இதில், "கடந்த ஆண்டை ஒப்பிடும்போது இந்த ஆண்டு கர்நாடகா உரிய நீரை திறக்கவில்லை. பிப்ரவரி முதல் மே வரையிலான நீரை உரிய முறையில் திறக்கவில்லை. அத்துடன், இந்த ஆண்டு கர்நாடகாவில் வழக்கமான மழைப் பொழிவு பதிவாகியுள்ளது. ஆனாலும், தண்ணீர் திறக்காமல் இருப்பது உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுகளை மீறும் செயல். ஆகவே, தண்ணீரை திறக்க உத்தரவிடுங்கள்" என வலியுறுத்தப்பட்டது.

ஆனால், கர்நாடகாவில் மழை இல்லை என்கிற பழைய பல்லவியையே திரும்ப திரும்ப பாடி வருகிறது. இது தரப்பு வாதங்களை கேட்ட ஒழுங்காற்றுக்குழு, தமிழ்நாட்டிற்கு இன்று முதல் வரும் 31ஆம் தேதி வரை நாள் தோறும் 1 டிஎம்சி தண்ணீர் திறந்து விட வேண்டும் என கர்நாடக அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்று காவிரி மேலாண்மை ஆணையத்திற்கு பரிந்துரைத்துள்ளது.

அதேபோல தமிழக எல்லையான பிலிகுண்டுலுவுக்கு செல்லும் நீரின் அளவு 1 டிஎம்சியாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும் எனவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# வேலை வாங்கித் தருவதாக ரூபாய் 4.75 லட்சம் மோசடி!

## பா.ஜ.க. மாநில பொறுப்பாளர் மீது வழக்குப் பதிவு!

சிவகங்கை. ஜூலை 12-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி கழனி வாசல் பகுதியை சேர்ந்தவர் கோபால் வயசு 66. இவர் தனது மருமகளுக்காக நெய்வேலி என்.எல்.சி நிறுவனத்தில் வேலை வாங்கி தருமாறு சிவகங்கையில் உள்ள மாநில பா.ஜ.க ஓ.பி.சி அணி பொறுப்பாளர் ராஜேந்திரனை அணுகியுள்ளார்.

இதற்கு ராஜேந்திரன் ரூபாய் 20லட்சம் செலவாகும் என்றும் அதற்கான பணத்தை தருமாறு ராஜேந்திரன் கோபாலிடம் கூறிஉள்ளார். கடந்த 2018ம் வருடம் வேலை வாங்கித் தருவதற்காக ராஜேந்திரனிடம் ரூபாய் 20 லட்சத்து 49 ஆயிரம் பணத்தை கோபால் தந்துள்ளார்.

6 வருடங்களுக்கு மேலாக வேலைவாங்கி தராமல் இருந்ததால் பணத்தை திருப்பி தருமாறு ராஜேந்திரனை கோபால் வற்புறுத்தி உள்ளார். இந்நிலையில் ராஜேந்திரன் ரூபாய் 15 லட்சத்து 75 ஆயிரம் கோபாலிடம் தந்துள்ளார்.

மீதித்தொகையான ரூபாய் 4 லட்சத்து 74 ஆயிரத்தை தராமல் ஏமாற்றி வந்துள்ளார். பணத்தை திருப்பி தருமாறு கோபால் ராஜேந்திரனிடம் கேட்டதற்கு அவர் சரியான பதில் கூறாமல் காலதாமதம் ஏற்படுத்தி உள்ளார்.

இதனால் மனவருத்தம் அடைந்த கோபால் சிவகங்கை இரண்டாவது மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ராஜேந்திரன் தனக்கு தரவேண்டிய ரூபாய் நான்கு லட்சத்து 74 ஆயிரத்தினை ராஜேந்திரனிடம் பெற்று தருமாறு வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கினை விசாரித்த நீதிபதி இது குறித்து மாவட்ட குற்றப்பிரிவு போலிசார் விசாரணை நடத்திட உத்தரவிட்டார்.

நீதிமன்ற உத்தரவின் பேரில் மாவட்ட குற்றப்பி ரிவு இன்ஸ்பெக்டர் சங்கீதா பா.ஜ.க. பிரமுகர் ராஜேந்திரன் மீது வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**பேருந்து சாலைகள் துறை**

பே.சா.து.ந.க.எண்.பி4/ 2712 /2024 **குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

கண்காணிப்பு பொறியாளர் / பே.சா.து அவர்களால் கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் 3 (மாதவரம்) கனரக மற்றும் இலகுரக வாகன நிறுத்த முனையம், சாலைகள், நிர்வாக மற்றும் பல்நோக்கு கட்டிடங்கள் மேம்படுத்தும் பணிகள் (7 சிப்பங்கள்)**

பணியின் உத்தேச தொகை : குறைந்தபட்சம் **ரூ.5.14 லட்சம் அதிகபட்சம் ரூ.5.36 கோடி**
முன்வைப்பு தொகை : மொத்த பணியின் உத்தேச தொகையில் **1 %**

**ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : 06.08.2024 அன்று மாலை 3.00 மணி வரை**

**ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் : 07.08.2024 அன்று மாலை 3.30 மணி**

மேலும் விவரங்களுக்கு **www.tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 2304 / ஒப்பந்தப்புள்ளி / 2024 **கண்காணிப்பு பொறியாளர் / பே.சா.து**



**பெருநகர சென்னை மாநகராட்சி**
**பேருந்து சாலைகள் துறை**

பே.சா.து.ந.க.எண்.பி3/ 2709 /2024 **குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

கண்காணிப்பு பொறியாளர் / பே.சா.து அவர்களால் கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

**பெருநகர சென்னை மாநகராட்சி, பேருந்து சாலை துறையில் பல்வேறு சாலைகளினல் நடைபாதைகளை (ஆரோக்கிய நடைபாதை) மேம்படுத்தும் பணி மண்டலம் - 4, 5, 9 & 12**

பணியின் உத்தேச தொகை: குறைந்தபட்சம் **ரூ.140 லட்சம் அதிகபட்சம் ரூ.210 லட்சம்**
முன்வைப்பு தொகை: மொத்த பணியின் உத்தேச தொகையில் **1 %**

**ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : 06.08.2024 அன்று மாலை 3.00 மணி வரை**

**ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் : 07.08.2024 அன்று மாலை 3.30 மணி**

மேலும் விவரங்களுக்கு **www.tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 2303 / ஒப்பந்தப்புள்ளி / 2024 **கண்காணிப்பு பொறியாளர் / பே.சா.து**



**பெருநகர சென்னை மாநகராட்சி**
**மண்டலம் - 9** ம.அ.9.ந.க.எண்.இ1/9258/2023

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கை**
**கீழ்கண்ட பணிக்கு மின்னணு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது**

| பணியின் விவரம் | பணியின் மதிப்பு ரூ. (இலட்சங்களில்) | முன் வைப்புத் தொகை | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை |
|---|---|---|---|
| **மண்டலம் - 9, பகுதி - 24, வார்டு எண்.118 ல் அண்ணா அறிவாலயம் அருகில் உள்ள ஹயாத் கட்டிடத்தின் முன்புறம் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி நிலத்தில் புதியதாக பசுமை பூங்கா அமைக்கும் பணி.** | ரூ.160.22 | ரூ.1,61,000/- | முதல் வகுப்பு |

ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் **25.07.2024 மாலை 3.00 மணி**
ஒப்பப் படிவங்கள் **http://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.
மின்னணு ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **26.07.2024 மாலை 3.30 மணி**

செ.ம.தொ.இ / 2298 / ஒப்பந்தப்புள்ளி / 2024 **மா.வ.அ / மண்டல அலுவலர் மண்டலம் - 9**


## எதிரிகளையும் மன்னித்து அருள்பாலிப்பவர் கலைஞர்!

# 'நாய்'களுக்கு என்ன பெருமை வந்துவிடப் போகிறது?



கலைஞரை ஒருவருக்கு அடையாளப்படுத்த வேண்டுமென்றால் இது தான் கலைஞர் என்று அவருடைய ஒரு புகைப்படத்தைக் காட்டியோ, அல்லது இதைத் தான் அவர் செய்தார் என்று அவர் செய்த சாதனைகளில் ஒன்றைக் குறிப்பிட்டோ, அல்லது இப்படித்தான் அவர் சிரிப்பார்... இப்படித்தான் அவர் நடப்பார்... இப்படித்தான் அவர் உட்காருவார் என்று ஏதேனும் சம்பவங்களை, நிகழ்வுகளை சுட்டிக்காட்டியோ... அவரை நாம் அடையாளப்படுத்திவிட முடியாது. ஆயிரக்கணக்கான விழுதுகளை உதிரத்திலிருந்து உருவாக்கி.... ஓங்கி வளர்ந்த... நூற்றாண்டுகால ஆலமரம் அவர்..! கண் பார்வையற்ற ஒரு மனிதன் முன்னே நிற்கும் யானை அவர்..!

**அவர் ஒரு புகைவண்டி போன்றவர்...! ஆம், அந்த தொடர் வண்டிக்கு திருவாரூரில் ஒரு முகம், தஞ்சையில் வேறு முகம், மயிலாடுதுறை ஜங்ஷனில் உணர்வான முகம், சிதம்பரத்தில் ஒய்யார முகம், விழுப்புரத்தில், திண்டிவனத்தில், காஞ்சியில், சென்னையில், வேலூரில், கிருஷ்ணகிரியில்... சேலத்தில்... கோவையில், நெல்லையில், தூத்துக்குடியில், கன்னியாகுமரியில், ராமேஸ்வரத்தில், மதுரையில், திண்டுக்கல்லில், திருச்சியில் என்று;**



**சௌமியன் வைத்தியநாதன்**
திராவிட இயக்க எழுத்தாளர்

அவருக்கான அடையாளங்களும், அவர் பதித்த தடங்களும், அங்கங்கே அவர் செய்து முடித்திருக்கின்ற அழியா சின்னங்களும், திட்டங்களும், புரட்சிகளும்....

மாணவனாக, இளைஞனாக, சினிமாகாரனாக, திராவிட இயக்க எழுத்தாளராக, பேச்சாளராக, கவிஞனாக, எம்.எல்.ஏ.வாக, அமைச்சராக, முதலமைச்சராக, ஒன்றிய அரசுகளின் சூத்திரதாரியாக,

சுதந்திர இந்தியாவில் தமிழ்நாட்டை மிக மிக அதிக காலம் ஆண்ட அரசனாக, அன்பானவராக, பண்பானவராக, பாசமானவராக, எதிரிகளையும் மன்னித்து அருள்பாலிக்கும் ஈர நெஞ்சினனாக,

தமிழ்நாட்டின் ஆண்டவனாக!

**இப்படி எந்தெந்த காலகட்டங்களில் எந்தெந்த பகுதிகளில் அவர் என்னென்னவாக இருந்தார், சாதித்தார். இந்த தமிழ்நாட்டை இந்தியாவின் மற்ற மாநிலங்களிலிருந்து பிரித்தெடுத்து ஐரோப்பிய ஒன்றியங்களின் மாகாணங்களுக்கு இணையாக வளர்த்தெடுத்திருக்கின்றார் என்பதை நாம் அந்த புது மனிதனுக்கு சொல்ல வேண்டுமானால்... ராமாயணம், மகாபாரதம் போன்ற கற்பனைக் கதைகளாக அல்லாமல் சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற உணர்வுமிக்க உண்மை வரலாற்று காப்பியமாக நாம் அதை வடித்தால் தான் சாத்தியமாகும்..!**

**யானையின் அடியில் அதன் மூத்திரத்தை நக்கிப் பார்த்து விட்டு, தன் கேவலமான சொறிபிடித்த கால்களைத் தூக்கி அந்த பிரம்மாண்ட யானையின் கால் அருகே மூத்திரம் பெய்து விட்டு ஓடும் நாய்களுக்கு என்ன பெருமை வந்துவிடப்போகிறது?!**

**அந்த நாயின் கேவலமான பெருமை பீத்தல் பற்றி அந்த மாபெரும் யானைக்கும் எதுவுமே தெரியாது!**